பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

07 07 2025 **MONDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பல்வேறு துறைகளில் ஆக்கப்பூர்வமான வகையில் பயன்படுத்தி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. பாதுகாப்புத்துறையில் முன்எப்போதும் இல்லாத வகையில் நாடு முன்னேற்றங்களை கண்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

3. கடந்த 11 ஆண்டுகால பிஜேபி ஆட்சியில் நாட்டில் மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

4. தமிழகத்தில் மாணவர்களுக்கான பள்ளி, கல்லூரி விடுதிகள் இனி “சமூகநீதி விடுதிகள்” என்று அழைக்கப்படும் என முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

5. ஆசிய இளையோர் மல்யுத்த போட்டியில் மகளிர் பிரிவில் இந்தியா மூன்று தங்கம், ஐந்து வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப்பதக்கத்தை வென்றுள்ளது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<<>>>>>

இந்தியா செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பல்வேறு துறைகளில் ஆக்கப்பூர்வமான வகையில் பயன்படுத்தி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பிரேசிலின் ரியோடி ஜெனிரோவில் நடைபெற்றுவரும் பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் பேசிய அவர், மனித உணர்வுகள் மற்றும் திறன்களை மேம்படுத்தும் கருவியாக, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் இந்தியாவில் செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

அனைவருக்கும் செயற்கை நுண்ணறிவு எனும் தாரக மந்திரத்தின்கீழ், தமது தலைமையிலான அரசு பல்வேறு துறைகளில் அதனை பயன்படுத்தி வருவதாகவும், அதனை பொறுப்புணர்வோடு பயன்படுத்துவதற்கான பணிகளில் நாம் கவனம் செலுத்த வேண்டும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

பிரச்சினைகளுக்கான தீர்வை அறிதல், புதுமை கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தல் ஆகியவற்றுக்கு சம முக்கியத்துவம் கிடைக்கும் வகையில் நிர்வாகத்தில் செயற்கை நுண்ணறிவு பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பல்வேறு வகையில் உலகம் வளர்ச்சி கண்டுவரும் நிலையில், பிரிக்ஸ் அமைப்பை மேலும் சிறப்பான வகையில் பயன்படுத்துவதற்கான வழிகளில் உறுப்புநாடுகள் கவனம் செலுத்த வேண்டும் என்று திரு நரேந்திர மோடி வலியுறுத்தினார்.

இந்த மாநாட்டிற்கு இடையே வியட்நாம் பிரதமர் திரு **Pham Minh Chinh**-ஐ சந்தித்து பிரதமர் பேச்சு நடத்தினார்.

**<<<<<>>>>>**

பாதுகாப்புத்துறையில் முன்எப்போதும் இல்லாத வகையில் நாடு முன்னேற்றங்களை கண்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் பாதுகாப்பு கணக்கியல் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய அவர், அமைதி காலத்தில் பாதுகாப்புத்துறையை வலுப்படுத்துவது குறித்து விவாதிக்க வேண்டியது அவசியம் என்று கூறினார்.

புதிய சாதனங்களுக்கான தேவைகள் ஏற்படும் நிலையில், அதுபற்றி முன்னரே சிந்தித்து செயலாற்றுவது முக்கியத்துவம் வாய்ந்தது என்று அவர் குறிப்பிட்டார்.

அதனை முன்னிட்டு, உலக நாடுகள் பாதுகாப்புத்துறையில் பல்வேறு சீர்திருத்தங்களையும், முதலீடுகளையும் மேற்கொண்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

பாதுகாப்பு கணக்கியல் துறையானது நாட்டின் பாதுகாப்பு அமைப்பின் ஒரு பகுதியாக விளங்குகிறது என்று அவர் கூறினார்.

அமெரிக்கா மற்றும் பல்வேறு ஐரோப்பிய நாடுகள் பாதுகாப்பு செலவினங்களை அதிகரித்துள்ள நிலையில், பாதுகாப்பு பொருளாதாரத்தின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளதாக திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

**<<<<<>>>>>**

கடந்த 11 ஆண்டுகால பிஜேபி ஆட்சியில் நாட்டில் மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

சென்னை கே கே நகரில் உள்ள **ESI** மருத்துவமனையில் பிரதமரின் மக்கள் நல்வாழ்வுத் திட்டத்தின்கீழ், “நலமான பாரதம் - வளமான பாரதம்” முகாமை தொடங்கிவைத்து பேசிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

***(Voice Byte - எல். முருகன் - 37 (1) Sec.)***

நாடு முழுவதும் 15 ஆயிரம் மக்கள் மருந்தகங்கள் திறக்கப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

மருத்துவர்களின் தேவைகளை கருத்தில்கொண்டு, மருத்துவப்படிப்பிற்கான இடங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் டாக்டர் எல். முருகன் தெரிவித்தார்.

***(Voice Byte - எல். முருகன் - (2) 25 Sec.)***

**<<<<<>>>>>**

தமிழகம் முழுவதும் பல்வேறு துறைகளின் கீழ் செயல்பட்டு வரும் ஏழை மாணவர்களுக்கான பள்ளி, கல்லூரி விடுதிகள் இனி "சமூகநீதி விடுதிகள்" என்று அழைக்கப்படும் என முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சாதி வேறுபாடு இன்றி அனைவரும் ஒன்றிணைந்து சமத்துவ சமுதாயத்தை கட்டமைக்க இந்த முயற்சி அடித்தளம் அமைக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழகம் முழுவதும் உள்ள 2 ஆயிரத்து 739 விடுதிகள் மூலமாக ஒரு லட்சத்து 79 ஆயிரத்து 568 மாணவ, மாணவியர் பயன்பெற்று வருவதாகவும், அவர்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாகவும் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, தமிழகத்தில் ஷெல்யூல்டு மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கான விடுதிகள் திமுக ஆட்சியில் மிக மோசமான நிலைமையில் இருந்து வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குறை கூறியுள்ளார்.

தமது சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், அந்த விடுதிகளை பார்வையிட்டுள்ளாரா என கேள்வி எழுப்பியுள்ளார்.

**<<<<<>>>>>**

தமிழகத்தில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, "மக்களை காப்போம் - தமிழகத்தை மீட்போம்" எனும் பிரச்சார பயணத்தை அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி இன்று மேட்டுப்பாளையத்தில் தொடங்கினார்.

இரண்டு நாட்கள் நடைபெறும் இப்பிரச்சார பயணத்தில் அஇஅதிமுக, பிஜேபி கட்சிகளை சேர்ந்த தலைவர்கள் பங்கேற்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

பீகார் மாநிலம் கத்திகார் நகரத்தில் நேற்றிரவு நடைபெற்ற வழிபாட்டு நிகழ்ச்சியில், இரு குழுக்களுக்கு இடையே மோதல் ஏற்பட்ட நிலையில், தற்போது அங்கு நிலைமை சீராகியுள்ளதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, செய்தியாளர்களிடம் பேசிய காவல்துறை அதிகாரி திரு பிரமோத் குமார் மண்டல், அப்பகுதியில் கூடுதலாக காவலர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கத்திகார் நகரம் முழுவதும் பாதுகாப்புப்படையினர் தொடர்ச்சியாக அணிவகுப்பை மேற்கொண்டு வருவதாகவும், சமூக நல்லிணக்கத்தை பேண மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>

இஸ்ரேல் – ஹமாஸ் போர் நிறுத்தம் தொடர்பாக, நடைபெற்ற அதிகாரபூர்வமற்ற முதல் சுற்று பேச்சுவார்த்தையில் எந்த முடிவும் எட்டப்படவில்லை என்று பாலஸ்தீன தரப்பு தெரிவித்துள்ளது.

போர் நிறுத்தம் மற்றும் பிணைக்கைதிகள் விடுவிப்பு ஒப்பந்தம் தொடர்பாக தோஹாவில் இப்பேச்சுவார்த்தை நடைபெற்றது.

அமெரிக்காவில் அந்நாட்டு அதிபர் திரு டொனல்டு ட்ரம்பபை சந்தித்து இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நெத்தன்யாகு பேச்சு நடத்தவுள்ள நிலையில், இத்தகவல் வெளியாகியுள்ளது.

<<<<<>>>>>

மத்தியப்பிரதேசத்தின் ஒரு சில பகுதிகளில் இன்று முதல் 10-ஆம் தேதிவரை கனமழை முதல், மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கோவா மற்றும் கொங்கன் பகுதி, மகாராஷ்ட்ராவின் மத்தியப்பகுதி மற்றும் குஜராத் மாநிலத்தின் ஒரு சில இடங்களில் அடுத்த ஆறு நாட்களுக்கு கனமழை முதல், மிகனமழை வரை பெய்யக்கூடும் என்று அந்த மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாகாலாந்து, மணிப்பூர், திரிபுரா ஆகிய வடகிழக்கு மாநிலங்களில் அடுத்த ஏழு நாட்களுக்கு இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமானது வரை மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

கேரளா மற்றும் மாஹேயின் ஒரு சில பகுதிகளில் வரும் 9-ஆம் தேதிமுதல், 12-ஆம்தேதிவரை கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளின் ஒரு சில இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலை இரண்டு முதல் மூன்று டிகிரி செல்சியஸ் இயல்பை விட அதிகமாக இருக்கக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

**<<<<<>>>>>**

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

ஆசிய இளையோர் மல்யுத்த போட்டியில் மகளிர் பிரிவில் இந்தியா மூன்று தங்கம், ஐந்து வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப்பதக்கத்தை வென்றுள்ளது.

கிர்கிஸ்தானில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் 33 கிலோ எடைப்பிரிவில் **'Jiya,** 39 கிலோ எடைப்பிரிவில் **'Diksha,** 66 கிலோ எடைப்பிரிவில் **'Purvi –** ஆகியோர் தங்கப்பதக்கம் வென்றனர்.

36 கிலோ எடைப்பிரிவில் ரோகினி, 42 கிலோ எடைப்பிரிவில் காயத்ரி, 46 கிலோ எடைப்பிரிவில் வைஷ்ணவி, 52 கிலோ எடைப்பிரிவில் சிம்ரன் மற்றும் வைஷ்ணவி ஆகியோர் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

58 கிலோ எடைப்பிரிவில் **'Sukhman '** வெண்கலப்பதக்கம் வென்றார்.

---------------

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் யுகி பாம்ரி – அமெரிக்காவின் ராபர்ட் கேலோவே இணை, இன்று ஸ்பெயினின் **Marcel Granollers -** அர்ஜென்டினாவின் **Horacio Zeballos** இணையை எதிர்கொள்கிறது.

**<<<<<>>>>>**